10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 அதிர்வு 26 சனிக்கிழமை 26 மே 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

# நினைவேந்தலுக்கு எதிர்ப்பு வங்கி மீது கடுப்பு

## ஒரே நாளில் நூற்றுக்கணக்கான கணக்குகள் முடக்கம்

கிளிநொச்சி,மே 26

தென்னிலங்கையை தலைமையகமாகக் கொண்டு கிளிநொச்சியில் தனது கிளையை வைத்திருந்த தனியார் வங்கியில் கடந்த 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்திய வங்கியின் உதவி முகாமையாளரும், ஊழியரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள விவகாரம் தமிழ் மக்களிடையே கடும் சீற்றத்தை தோற்றுவித்துள்ளது.

இந்த நினைவேந்தல் தொடர்பான புகைப்படங்கள் சமூகவலைதளத்தில் வெளியாகியதை அடுத்து, கொழும்பிலுள்ள குறித்த தனியார் வங்கியின் தலைமை அலுவலக உயர் அதிகாரிகள், கிளிநொச்சி வங்கியின் உதவி முகாமையாளரை விசாரணைக்கு உட்படுத்தினர். 06



## வெள்ளை வான் சூத்திரதாரி கோத்தாவே!

கொழும்பு,மே 26

கடந்த காலங்களில் தனியான குழுவொன்றை நியமித்து கோத்தபாய ராஜபக்சவே, வெள்ளை வான் கடத்தல்களையும், கொலைகளையும் கொழும்பிலிருந்து அரங்கேற்றியதாக அமைச்சர் சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

கம்பகாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் பொன்சேகா இவ்வாறு தெரிவித்தார். 06

## கொள்கை மீறியதாலேயே நடவடிக்கையாம்

### சளாப்புகிறது வங்கி

கொழும்பு,மே 26

வங்கியின் சமூக ஊடகக் கொள்கையை மீறிய குற்றச்சாட்டிலேயே கிளிநொச்சிக் கிளையின் உதவி முகாமையாளருக்கும் உத்தியோகத்தர் ஒருவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது என தனியார் வங்கி அறிவித்துள்ளது.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் குறித்த தனியார் வங்கியின் கிளிநொச்சிக் கிளையில், போரில் உயிரிழந்த பொது மக்களுக்கு 06

## என்ர காசை திருப்பித் தாங்கோ

### ஒற்றைக் காலில் தவராசா



யாழ்ப்பாணம்,மே 26

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் செலுத்திய 7 ஆயிரம் ரூபாவினை தனக்கு மீள வழங்குமாறு வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

மே -18 அன்று முள்ளிவாய்க்கால் நினைவு அஞ்சலிக்கான ஏற்பாட்டுச் செலவுகளின் பொருட்டு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 38 பேரில் 33 பேரிடம் இருந்து தலா 7 ஆயிரம் ரூபா பெறப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த நிகழ்வை 06

## மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சி

கொழும்பு,மே 26

மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். கிழக்கு, சப்பரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தேர்தலைக் கண்டு அஞ்சுகின்றது என்பது தெளிவான ஓர் உண்மை என குறிப்பிட்டுள்ள டலஸ் அழகப்பெரும், எல்லை நிர்ணய அறிக்கையை அரசாங்கம் ஓர்கருவியாக பயன்படுத்தி தேர்தலை ஒத்தி வைப்பதற்கு முயற்சிப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

(த)

## தாளம் போடாதீர்

### அரச அலுவலர்களுக்கு முதலமைச்சர் அட்வைஸ்



கொழும்பு,மே 26

மத்தியை ஆத்திரமூட்டினால் கிடைப்பதும் கிடைக்காமல் போய்விடுமோ என எமது மாகாண அலுவலர்கள் அஞ்சுகின்றார்கள் என முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்குமாகாணம் சம்பந்தமான பூர்வாங்க தேவைகள் மதிப்பீட்டு பணிக் கூட்டம் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திலுள்ள விடுதியொன்றில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 06

## ஹோட்டல் வேண்டாம் யாழில் அமைதிப்பேரணி



யாழ்ப்பாணம்,மே 26

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அண்மையாக ஜின்னாஹ் வீதியில் அமைந்துள்ள கலீமா ஒழுங்கையில் "குளோபல் டிரேடிங் சொலுஷன்" நிறுவனம் ஹோட்டல் ஒன்றை நிர்மாணிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்றையதினம் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். 06

## பணியாளரை இடைநிறுத்திய வங்கியை வடக்கு கிழக்கில் தடை செய்க

### நாடாளுமன்றில் சிறிதரன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு,மே 26

தமிழ் மக்களின் உணர்வுகளை விளங்கிக்கொள்ளாது சிங்கள, பௌத்த மேலாதிக்கத்துடன் செயற்படும் தனியார் வங்கியை வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தடை செய்ய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற 06

## கதிர்காமத்தில் கோத்தா பங்களா



கொழும்பு,மே 26

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச கதிர்காமத்தில் பாரிய ஆடம்பர மாளிகையொன்றை கட்டியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று ஆதாரங்களுடன் தகவல் வெளியிட்டுள்ளது.

தனது மனைவியின் பெயரில் உதகமுல்ல பகுதியில் உள்ள வீட்டைத் தவிர வேறெந்த சொத்துக்களும் இலங்கை 06

## கூட்டமைப்புக்கு உரிமை இல்லை

### திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு,மே 26

பிரதி சபாநாயகர் பதவியைக் கோருவதற்கு கூட்டமைப்புக்கு தார்மீக உரிமை கிடையாது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"அதிக எண்ணிக்கையினைக் கொண்ட எதிர்த்தரப்பினரைக் கூட்டு எதிரணியினர் கொண்டிருக்கின்றனர். இதனால் பிரதி சபாநாயகர் பதவியைக் கூட்டு எதிரணியினருக்கே வழங்க 06

## மாணவியிடம் தவறாக நடக்க முற்பட்ட ஆசிரியர் மீது விசாரணை

கிளிநொச்சி,மே 26

கிளிநொச்சியில் உள்ள பாடசாலையொன்றில் மாணவியிடம் ஆசிரியர் ஒருவர் தவறாக நடக்க முற்பட்டார் என்று தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் பாடசாலை அதிபர் மற்றும் குறித்த ஆசிரியரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் சிறுவர் நன்னடத்தை அதிகாரியால் நேற்றைய தினம் நடத்தப்பட்டதாக தெரியவருகின்றது. 06

# 6000 சீனர்கள் இலங்கையில்

கொழும்பு, மே 26

இலங்கையில் 6000 இற்கும் அதிகமான சீனர்கள் பல்வேறு திட்டங்களில் பணியாற்றி வருகின்றனர் என்று கொழும்பில் உள்ள சீனத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

"இலங்கை - சீனக் கூட்டுத் திட்டங்களில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகளிலேயே பெரும்பாலான சீனர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு துறைமுக நகரத் திட்டம், அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம், நெடுஞ்சாலைத் திட்டங்கள், மற்றும் கட்டுமானப் பணிகளிலும் சீனப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சீன- இலங்கைக் கூட்டுத் திட்டங்களுடன் தொடர்புடைய சீன நிறுவனங்கள், சீனப் பணியாளர்களை பணியில் அமர்த்துவதற்கு இலங்கை அரசாங்கத்திடம் இருந்து அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்." என்று சீனத் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வணிக விவகாரங்களைக் கையாளும் அதிகாரியான யாங் சூயுவான் தெரிவித்துள்ளார். (ஆ)




# தூத்துக்குடி வன்முறைக்கு எதிராக நல்லூரிலும் போராட்டம்!

நல்லூர், மே 26

தமிழகம் தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி போராட்டம் நடத்திய மக்கள்மீது, பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து, யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய முன்றிலில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப்போராட்டத்தில் பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது "மோடி அரசே தமிழகத்திலா உன்சூட்டுப் பயிற்சி", "சுடாதே சுடாதே தமிழர்களைச் சுடாதே", "அடிக்காதே அடிக்காதே தமிழர்களை அடிக்காதே", "சுட்டுப் பழகுவதற்கு தமிழர்கள் என்ன பொம்மையா"?, "இந்திய அரசே ஆலை அவசியமா தமிழனின் உயிர் அவசியமா?" போன்ற சுலோகங்களைக் கொண்ட பதாகைகளைப் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின்போது, தமிழகப் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 13 பொதுமக்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# தப்போவ நீர்த்தேக்க வான் கதவுகள் திறப்பு!


புத்தளம், மே 26

நாட்டில்தொடரும்சீரற்ற காலநிலை காரணமாக புத்தளம் தப்போவ நீர்த்தேக்கத்தின் 20 வான் கதவுகள் நேற்று அதிகாலை திறக்கப்பட்டுள்ளன என்று புத்தளம்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால், தப்போவ நீர்த்தேக்கத்தில் இருந்து நிமிடம் ஒன்றுக்கு 5,750 கன அளவு நீர் வெளியேற்றப்படுகின்றது.

இதன் காரணமாக தப்போவ நீர்த்தேக்கத்தை அண்டிய தாழ்வான பிரதேசங்கலில்வசிக்கும்மக்களைப்பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# 20 ஆவது திருத்தத்தை சமர்ப்பித்தது ஜே.வி.பி!!



கொழும்பு, மே 26

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் உள்ளிட்ட திருத்தங்கள் அடங்கிய, அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தை ஜே.வி.பி நேற்று சமர்ப்பித்தது

இதனைத் தனிநபர் பிரேரணையாகவே ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக திஸாநாயக்கவிடம் கையளித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக, இதற்கு முன்னர் ஆட்சிபீடமேறிய சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச ஆகிய முன்னாள் ஜனாதிபதிகள் இருவரும், 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதியன்று ஆட்சிபீடமேறிய தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## நினைவேந்தல்:
# முன்னாள் போராளிக்கு அழைப்பாணை!

கிளிநொச்சி, மே 26

கிளிநொச்சியில்முள்ளிவாய்க்கால்இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய முன்னாள் போராளி ஒருவரை விசாரணைக்கு வருமாறு, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அழைப்பாணை விடுத்துள்ளது.

கே. ஜெயக்குமார் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான முன்னாள் போராளியையே, கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்தின் மூன்றாவது மாடியில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு பிரிவு விசாரணைக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட, இந்த முன்னாள் போராளி போரில் ஒரு காலை இழந்தவர் ஆவார். இவர், தற்போது கிளிநொச்சி சந்தையில் காய்கறிக் கடை ஒன்றை நடத்தி வருகிறார்.

மாவட்ட வணிகர் சங்கத்தின் தலைவராகவும், தமிழரசுக் கட்சியின் உறுப்பினராகவும் உள்ள இவர், கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சியில் நடந்த நினைவேந்தல் நிகழ்வுக்குத் தலைமை தாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# சில வாரங்களுக்குள் அனர்த்த இழப்பீடு!

கொழும்பு, மே 26

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கை, சில வாரங்களுக்குள் இடம்பெறும் என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

"பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் முழு அளவில் தயார் நிலையில் உள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த முறை பாதிப்புக்கள் குறைவாகவே உள்ளன. கடந்த ஆண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில், காலி மாவட்டத்துக்கு 80 கோடி ரூபாவும், களுத்துறை மாவட்டத்துக்கு 100 கோடி ரூபாவும், மாத்தறை மாவட்டத்துக்கு 150 கோடி ரூபாவும், இரத்தினபுரி மாவட்டத்துக்கு 200 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இடர்நிலைமைகள் பற்றி பொதுமக்கள் தொலைபேசி வாயிலாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிவிக்க முடியும். இதற்காக 1902 என்ற தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்த முடியும். மேலும், தமது வீட்டுக்கோ, சொத்துக்களுக்கோ பாதிப்பு ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் கிராம உத்தியோகத்தருக்கோ, பிரதேசத்தைச் சேர்ந்த கள உத்தியோகத்தர்களுக்கோ அறியத் தரலாம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# கிரிக்கெட் வீரரின் தந்தை சுட்டுப் படுகொலை!



கொழும்பு, மே 26

இலங்கை கிரிக்கெட் அணி வீரர் தனஞ்சய டி சில்வாவின் தந்தையும், தெகிவளை - கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான ரஞ்சன் டி சில்வா (வயது-62) அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இரத்மலானை, கடற்கரை வீதியில் அமைந்துள்ள அவருடைய வீட்டில் வைத்தே நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டின் முற்றத்தில் அமர்ந்திருந்து தன்னுடைய ஆதரவாளர்களுடன் கலந்துரையாடிக்கொண்டிருந்த போதே, இனந்தெரியாத நபர்கள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

அவர் மீது சுமார் 12 தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் மேலும் இரண்டு பேர் காயமடைந்த நிலையில், களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரத்மலானை லன்சியா மற்றும் இரத்மலானை ரொஹா ஆகிய இரு பாதாள உலகக் கோஷ்டியினருக்கிடையில் நீண்டகாலமாக நிலவி வந்த பிரச்சினையே, இந்த துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த ரஞ்சன் சில்வா, இரத்மலானை ரொஹா குழுவினருக்கு நிதியுதவி வழங்கி வந்துள்ளார் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட ரஞ்சன் டி சில்வா மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் ஆவார். இவர் அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு, தெகிவளை கல்கிசை மாநகர சபைக்குத் தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# இலங்கைக்கான அமெ. தூதுவர் நியமனம்!



கொழும்பு, மே 26

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக அலைனா பி டெப்பிளிட்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நியமனத்தைச் செனெட் சபை அங்கீகரிக்கும் பட்சத்தில், அதுல் கெசாப்புக்குப் பின்னர் அலைனா டெப்பிளிட்ஸ் இலங்கைத் தூதுவராக பணியாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நேபாளத்துக்கான அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றும் அலைனா டெப்பிளிட்சையே, ட்ரம்ப் இலங்கைத் தூதுவராக நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

எதிரொலி
Ethiroli
சனி, 26 மே 2018 ethirolimedia@gmail.com

## வேண்டும் நமக்கான வங்கி

தமிழனத்தின் நிதிசார்ந்த கட்டுக்கோப்பான நடவடிக்கை ஒன்றை எடுக்கும் முக்கிய தருணத்துக்கு, இனவழிப்பு நினைவேந்தலை நடத்திய பணியாளர்களை இடைநிறுத்திய வங்கி ஒன்றின் செயற்பாடு, கொண்டு வந்து நிறுத்தியுள்ளது . குறித்த வங்கியின் நடவடிக்கை எடுகோளாக எதிர்பாராத விதமாக நடந்திருந்தாலும், நமது நிதி மூலத்தை நம்மிடையே பகிரும், நம்மவர்க்கு மட்டுமே பயன்படச்செய்யும் வழிவகைகளை இனி நாம் கண்டிப்பாக எடுக்கவேண்டும் என்ற இயலுமையான (இயலாத அல்ல) முக்கிய காரணம் ஒன்றுக்கு அடியிடல் வைக்கப்பட்டுள்ளது.

எமது மக்கள் வாழும் வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழர் தரப்பை மையப்படுத்திய கட்டமைக்கப்பட்ட நிதிப் பாவனை செய்யும் சேமிப்பு வங்கிகளை, கிளைகளை உருவாக்க நாம் தயாராக வேண்டும்.

தெற்கு வங்கிகளையும் அதன் கிளைகளையும் நம்பிய நிதி திட்டங்களை நாம் கைவிடவேண்டிய தருணம் இது. வடக்கு கிழக்குக்கு தனியான தமிழர் வங்கிகளை உருவாக்க நமது அரசியல் தலைமைகளும், வடக்கு கிழக்கு அரசியல் அமைப்புக்களும் முயல்வதோடு, பெரும் வர்த்தகர்களின் நிதியை திரட்சியடைய வைக்கவும் மக்களுக்கான நிதி பங்களிப்பை நேர்த்தியாக வழங்கவும் எமக்கான வங்கி ஒன்றை நாம் உருவாக்க வேண்டும்.

தமிழர்களுக்கு இது புதிய விடயம் அல்ல என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். எமது அரசியல் தலைமைகள் வேண்டாவெறுப்பாக செயற்படுவதை நாம் இந்த தருணங்களிலாவது கண்டிப்பாக உணர்ந்துகொண்டு எமக்கானவற்றை நாமே அடைய முயற்சிக்க வேண்டும்.

தெற்கு வங்கிகள் புறக்கணிக்கப்படவேண்டும் என்பதோடு – எமது பணம் தெற்கு வங்கிகள் அநியாயமாக இலாபமீட்டுவதற்கும் தெற்கு பகுதிகள் அபிவிருத்தி அடைவதற்குமே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. எமதுபணம் எமது மக்களுக்கே கடனாக வழங்கப்பட்டு எமது மக்களிடமிருந்து அநியாய வட்டியாக வசூலிக்கப்படுகிறது. இந்தப் போக்கு முற்றாக நிறுத்தப்பட வேண்டும்

எமது தனித்துவம் என்பது கட்சிகளை உருவாக்கி தேர்தலில் களமிறக்கி பதவிக்கு சண்டை போடுவதல்ல – எமக்கான கட்டுக்கோப்பான அரசியல் நகர்வை செய்வது மட்டுமே இனி ஆக வேண்டிய செயல் .

தமிழர் பகுதிகளில் இருக்கும் வளங்களை தமிழரே ஆளவேண்டும் என்பதே எமது நிலையான கருதுகோள் எனில், எமது நிதி மூலங்கள் நமக்குள்ளேயே பங்கிடப்படவேண்டும் நமக்குள்ளேயே சுழற்சியடையவேண்டும். எமது உழைப்பு எமக்கானது என்ற கருதுகோளை கையிலெடுக்கவேண்டும். அனைவரும் சிந்தியுங்கள். முக்கியமாக நிதி முகாமைத்துவம் என்பதே ஒரு இனத்தின் பொருளாதாரத்துக்கான கட்டியம் என்பதை நன்கு ஆராய்ந்து செயற்பட முன்வாருங்கள்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பிரிகேடியர் பிரியங்க விவகாரம் பிரிட்டன் நாடாளுமன்றில் கேள்வி

கொழும்பு, மே 26

லண்டனில் ஆர்ப்பாட்டம் நடத்திய புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்திய, இலங்கை தூதரக பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ விவகாரம் குறித்து, பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

லண்டனில் உள்ள இலங்கை தூதரக பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ நாடு திரும்பிய பின்னர், இலங்கை வெளிவிவகார அமைச்சருடன், நடத்தப்பட்ட பேச்சுக்கள் தொடர்பான விபரங்களைத் தெரியப்படுத்துமாறு, கடந்த புதன்கிழமை பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹைவெல்



வில்லியம், ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சரிடம், கேள்வி எழுப்பினார்.

அதற்கு, ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் மார்க் பீல்ட், கொமன்வெல்த் உச்சி மாநாட்டின் பக்க நிகழ்வாக, கடந்த ஏப்ரல் 18ஆம் நாள், இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்தித்துப் பேசியதாக குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின் போது பாதுகாப்பு ஆலோசகர் விவகாரம் குறித்தும் தாம் விசாரித்ததாகவும் அவர் கூறினார்.

மேலும், ஏப்ரல் 15ஆம் நாளுடன் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகரின் பதவிக்காலம் இலங்கை அரசாங்கத்தினால் முறைப்படி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டதாகவும், அதற்குப் பின்னர் அந்தப் பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை எனவும், மார்க் பீல்ட் குறிப்பிட்டார்.

## கூண்டை விட்டு தப்பிய கரடி துப்பாக்கி சூட்டில் உயிரிழப்பு

கொழும்பு, மே 26

கூண்டை விட்டுத் தப்பிச் சென்ற கரடியொன்று வனப்பாதுகாப்பு அதிகாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று காலை பொலனறுவை மாவட்டத்தின் கிரிதலே பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது.

கிரிதலே மிருக வைத்தியர் அலுவலகத்துக்கு கடந்த 15ம் திகதி கரடியொன்று கூண்டில் அடைக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக எடுத்து வரப்பட்டிருந்தது. எனினும் கடந்த 20ஆம் திகதி குறித்த கரடி கூண்டை விட்டு தப்பிச் சென்றிருந்தது.

அதன் பின்னர் கிரிதலே பிரதேசத்தில் உள்ள பொதுமக்கள் குடியிருப்பு பகுதிகளில் நடமாடித் திரிந்த கரடி பொதுமக்கள் சிலரை தாக்கிய சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

இந்நிலையில் நேற்று காலை கிரிதலே குளம் அருகில் இரண்டு பேர் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகிக் கொண்டிருப்பதாக வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.

பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக வனப் பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கரடி அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளது. குறித்த கரடிக்கு சுமார் ஏழு வருடங்கள் வயதிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.



## ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்து பதவி விலகிய திலங்க சுமதிபால

கொழும்பு, மே 26

தேர்தலில் தோல்வியடைந்த தன்னை, தேசிய பட்டியலினூடாக நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்தமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி பாராட்டி, நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து திலங்க சுமதிபால விலகியுள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்துள்ளதாக, கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.



பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அதிகாரத்தின் கீழ் நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் பதவியில் நீடிக்க விருப்பமில்லை என்றும் அவர் தனது இராஜினாமாகடிதத்தில்சுட்டிக்காட்டியுள்ளார்.

## நட்புறவுடன் உரையாடிய மூன்று தலைவர்கள்

கொழும்பு, மே 26

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அரசியல் மேடையில் பேசப்படும் நாட்டின் முக்கிய தலைவர்கள் மூவரும் ஒரே மேசையில் அளவளாவிக் கொண்டிருந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஊடகவியலாளர் ஒருவரின் மகளின் திருமண வைபவம் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொள்வதற்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்



கோத்தாபய ராஜபக்ஷவும் நட்பு ரீதியில் உரையாடிக் கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள் பலரும் கலந்துகொண்டுள்ளதாகவும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வெளியான செய்தி பொய் ஜனாதிபதி ஊடகப்பிரிவு

கொழும்பு, மே 26

"சிவில் போராட்டங்களுக்கான பின்னணியை ஏற்படுத்தும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் இடமளிக்க வேண்டாம்" மற்றும் "நாட்டைப் பிளவுபடுத்தும் செயல்கள் தொடர்பாக பாதுகாப்புத் துறையினர் அவதானத்துடன் உள்ளனர்" எனும் தலைப்புகளில் தேசிய செய்திப் பத்திரிகைகள் இரண்டில் நேற்றைய தினம் பிரசுரிக்கப்பட்டுள்ள செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த செய்தி யாரேனுமொரு நபர் அல்லது அமைப்பினால் உருவாக்கப்பட்டு ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஒரு பொய்யான செய்தியாகும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகையதொரு பொய்யான செய்தியை ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தவர் யார் என்பது பற்றிய துரித விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (முன்னர் வந்த செய்தி 02ஆம் பக்கத்தில்)

## இன்று நாளும் கோளும்

26.05.2018 சனிக்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 11 ஆம் நாள்

துவாதசி பி.ப. 07.16 வரை | சித்திரை மு.ப. 10.30 வரை | குளிகை மு.ப. 06.00-07.30

இராகுகாலம் 09.00- 10.30 | சுபநேரம் காலை 10.30 - 11.30 | எமகண்டம் 01.30 - 03.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குழப்பம் | இரக்கம் | சோர்வு | கவலை | இன்பம் | துயரம் | வேதனை | ஆதாயம் | அனுகூலம் | சினம் | நன்மை | சுகம் |

# ஆயுதப் போராட்டத்துக்கு இடமளிக்க வேண்டாம்!

## அரசாங்கம் ஆலோசனை



கொழும்பு, மே 26

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட நாட்டின் எந்தவொரு பிரதேசங்களிலும் ஆயுதங்களை ஏந்தி சிவில் போராட்டத்தை முன்னெடுப்பதற்கோ அல்லது நாட்டைத் துண்டாடுவதற்கோ, அவற்றுக்கான பின்புலத்தைத் தயாரிப்பதற்கோ எந்த வகையிலும் இடமளிக்க வேண்டாம் என்று பாதுகாப்புத் தரப்பினருக்கு அரசாங்கம் அண்மையில் ஆலோசனை வழங்கி உள்ளது.

அண்மையில் இடம்பெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின்போதே முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட சகல பாதுகாப்புப் பிரதானிகளுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இவ்வாறான ஆலோசனைகளை வழங்கியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டைப் பிரித்தல், ஆயுதங்களைக் கொண்டுவந்து போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகள் தொடர்பிலும் எந்நேரமும் விழிப்பாக இருக்குமாறும் இராணுவத்துக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட நினைவுகூரல்நிகழ்வுகளுக்குப் பின்னர், அவ்வாறான எவ்விதமான தொரு முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை என பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது. (ஆ)

# ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்தால் ஊடகவியலாளர்களுக்கு ஆபத்து!

## எச்சரிக்கிறார் பிரதமர்

கொழும்பு, மே 26

ராஜபக்சவினரை மீண்டும் ஆட்சி பீடத்தில் ஏற்றக் குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்கள், தமது கழுத்தில் தாமே சுருக்கைப் போட்டுக்கொள்கின்றனர் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில்கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"குரல் கொடுக்காத பல ஊடகவியலாளர்களும் அவர்கள் ஆட்சிக்கு வந்தால், காணாமல் போகக்கூடும். ராஜபக்சவினரின் நடைமுறை இதுதான். இதனை நான் மீண்டும் நினைவூட்ட வேண்டியதில்லை. நான் கூறும் இந்த விடயத்தை பத்திரிகைகளில் வெளியிடமாட்டார்கள். தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பாகாது. ஆனால், எமது கட்சியினர்இதனை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மீண்டும் இராணுவ ஆட்சியை ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல. உங்களுக்கு ஜனநாயகம் தேவையா அல்லது ராஜபக்ச ஆட்சி- 2 தேவையா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

நாட்டில் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவுடனும், மொட்டுத் தரப்பிலும் இணைந்திருக்கும் முன்னாள் படை வீரர்கள் இராணுவ அடக்குமுறை ஆட்சி ஒன்றைக் கொண்டுவர மறைமுகமான சதித் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகின்றது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# மயிலிட்டி மீள்குடியேற்றம்: 1600 மில்லியன் நிதி தேவை!

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



கொழும்பு, மே 26

அண்மையில் விடுவிக்கப்பட்ட வலிகாமம் வடக்கு மயிலிட்டிப் பகுதியில் உள்ள 683 ஏக்கர் காணிகளில் மீள்குடியேற்றம் செய்வதற்கு, ஆயிரத்து 600 மில்லியன் ரூபா நிதி தேவைப்படும்என்று யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

"வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள மயிலிட்டியில் சுமார் 683 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்வதற்கான மதிப்பீட்டுப் பணிகள் துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சுமார் ஆயிரத்து 600 மில்லியன் ரூபா நிதி தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி வீட்டுத் திட்டம், அடிப்படை வசதிகள், கட்டுமானப்பணிகள் என்பனவற்றை மேற்கொள்ள முடியும். இந்த மதிப்பீட்டு விவரங்கள் மீள்குடியேற்ற அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த நிதியுதவி கிடைக்கும் பட்சத்தில் மீள்குடியேற்றம் மிக விரைவில் முன்னெடுக்கப்படும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# 20 ஆவது திருத்தத்தை விரைவில் விவாதிக்குக!

## சொல்கிறார் அநுரகுமார



கொழும்பு, மே 26

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த தனி நபர் பிரேரணையை, அரசாங்கத்துக்கு தாமதமாக்கும் நோக்கம் இல்லாமலிருந்தால் மிக விரைவாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும்எதிர்க்கட்சியின்பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த தனி நபர் பிரேரணையை நேற்று சபாநாயகர் கரு ஜயசூரிய விடம் கையளித்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"புதிய அரசியலமைப்பினூடாக அனைத்தையும் கொண்டு வருவதற்கே நாம் முனைந்தோம். ஆனாலும், தற்போதைய அரசியல் சூழலில் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கான சாத்தியம் முற்றிலும் குறைவாகும். அதன் காரணமாகவே ஜனநாயகத்தை பலப்படுத்தும் 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை எமது நாட்டில் பல நெருக்கடிகள் ஏற்படுத்தி உள்ளது. அது மாத்திரமின்றி ஜனநாயக நிறுவனங்களின் அதிகாரங்களைத் தாழ்த்தியுள்ளது. நாடாளுமன்றத்தையும் அதிகாரமற்றதாக மாற்றியுள்ளது. அமைச்சரவையின் நிலைமையும் அப்படியாகும். அந்த முறைமை நீதிமன்ற சுயாதீனத்தையும் இல்லாமல் செய்தது.

ஆகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கும் 20 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் தனது நிலைப்பாட்டை உடன் அறிவிக்க வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# அனர்த்தங்களால் நோய் அபாயம்!

கொழும்பு, மே 26

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையால் நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், மக்களை அவதானமாகச் செயற்படுமாறும் சுகாதார அமைப்புகள் வேண்டுகோள்விடுத்துள்ளன.

மேலும், நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு தமது ஊழியர்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மஹேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார். (ஆ)

# தேயிலை ஏற்றுமதி அதிகரிப்பு

கொழும்பு, மே 26

கடந்த 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேயிலை ஏற்றுமதி அதிகரித்துள்ளது என போப்ஸ் அன்ட் வோர்க்கஸ் தேயிலைத் தரகு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் தேயிலை ஏற்றுமதியின் மூலம் ஆயிரத்து 650 கோடி ரூபா ஈட்டப்பட்டது. இதன் மூலம் ஆயிரத்து 710 கோடி ரூபாவாக வருமானம் அதிகரித்துள்ளது என்று தேயிலை ஏற்றுமதி குறித்து புள்ளிவிபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ஆ)

# புதையல் வேட்டை: எழுவர் சிக்கினர்!

கிளிநொச்சி, மே 26

கிளிநொச்சி இராமநாதபுரம் பிரதேசத்தில் புதையல் தோண்டுவதற்கு முயன்ற குற்றச்சாட்டில், இந்தியப் பிரஜைகள் மூவர் உட்பட ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுடன் தொடர்புடைய இந்தியப் பிரஜைகளுடன் இணைந்தே, இந்தப் புதையல் தோண்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் எம்பிலிப்பிட்டிய, ஹொரகந்தர, அம்பலங்கொட மற்றும் மினுவாங்கொட ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட இந்திப் பிரஜைகள் மூவரும், விசா இன்றி சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்துள்ளனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

புதையல் தோண்டுவதற்கு முன்னர்பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள இவர்கள் பயன்படுத்திய பூஜை பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஏழு பேரையும், கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஆ)

# கரணவாயில் அடிக்கல் நாட்டு விழா

கரணவாய் மேற்கு J/349 கிராமசேவையாளர் பிரிவில் தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா, நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

இந்தப் பகுதியில் வசிக்கும் 101 குடும்பங்களுக்குக் குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் 10 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ், இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன், கரவெட்டி திட்டமிடல் பணிப்பாளர், கரவெட்டி கிராம அலுவலகர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஆ-11)












## கண்காட்சியும் விற்பனையும்

நல்லூர், மே 26

புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் அமைச்சின் ஏற்பாட்டில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்கள் மற்றும், சமூகத்துடன் இணைக்கப்பட்ட பயனாளிகள் ஆகியோரால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும், யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் தோப்பில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து விவகார அலுவல்கள் அமைச்சர் டீ.எம். சுவாமிநாதன் இதனை ஆரம்பித்துவைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, வட மாகாண விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சர் க.சிவனேசன், இந்தியத் துணைத் தூதுவர் பாலகிருஷ்ணன், வட மாகாண எதிர்கட்சித் தலைவர் சி. தவராசா மற்றும் வட மாகாண சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஆ-4)

# பகல் கனவு காணும் பிரதமர் ரணில்!

## சொல்கிறார் திஸ்ஸ விதாரண



கொழும்பு, மே 26

நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சியமைக்கும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க பகல் கனவு காண்கின்றார் என்று லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

"19 ஆவது அரசியலமைப்பை இரத்துச் செய்து விட்டு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமைத்துவத்தில் அரசாங்கம் செயற்பட வேண்டும். இதுவே பெரும்பாலான மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. முறையற்ற நிர்வாகத்தை மேற்கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சி அதிகாரத்தை பெற முயற்சிக்கின்றமை வேடிக்கையாக உள்ளது. நாட்டை அடுத்து யார் ஆளவேண்டும் என்பதை மக்களே தீர்மானிப்பார்கள். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மக்கள் மத்தியில் வாக்குகளை கேட்பதற்கு எவ்வித தார்மீக உரிமைகளும் கிடையாது.

தேசிய அரசாங்கத்தில் இருந்து தற்போது பல உறுப்பினர்கள் கூட்டு எதிரணியினர் பக்கம் இணைந்துள்ளனர். இதுவே நல்லாட்சி அரசாங்கத்தின் தோல்வியாக உள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் மகிந்த தரப்பினருடன் இணைந்துள்ளனர். தேசிய அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகத்தின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலை முன்னிலைப்படுத்தி தற்போது பாரிய முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமைத்துவத்திலான கூட்டு எதிரணி தற்போது பல கட்சிகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது . இதனை எதிர்கட்சி என்று கூற முடியாது. ஏனென்றால் இரண்டு பிரதான கட்சிகளை விட பொது எதிரணியினரே இப்போது பலம் பெற்ற கட்சியாக உள்ளனர்." என்றும் அவர் தெரிவித்தார்.

(ஆ)

# பொதுஜன பெரமுனவே தேர்தலில் வெல்லும்

## ஷெஹான் தெரிவிப்பு



கொழும்பு, மே 26

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் தேர்தல்கள் அனைத்திலும் வெற்றி பெறுவது உறுதியாகியுள்ளது. அதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்றுக் கொண்டுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"அரசாங்கத்தில் இருந்து வெளியேறி எதிர்க்கட்சியுடன் இணைந்துகொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் கடந்த புதன் கிழமை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவைச் சந்தித்தனர். அந்தச் சந்திப்பு வெற்றியளித்துள்ளது. இதனால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் இணைந்து எதிர்க்கட்சியாகச் செயற்பட உள்ளோம். பொதுஜன பெரமுனவுக்கு அதிகளவானோரின் ஆதரவு இருப்பது உறுதியாகி உள்ளது. அதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகித்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குபவர்களும் நன்கு உணர்ந்துள்ளனர்." என்றும் அவர் தெரிவித்தார்.

(ஆ)



## சுனாமியும், சூறாவளியும், சுழல் காத்தும் ஏன்? .... ஏன்?......ஏன்?

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விலண்டு தாங்கள் வேலை செய்த வங்கியிலை தங்கடை சகோதரங்களும், உறவுகளும் கொல்லப்பட்டதை நினைச்சு விளக்கு வைச்சுக் கும்பிட்ட ஆக்களை வேலையிலை இருந்து நிப்பாட்டிப் போட்டினமாம் அவையின்ரை அதிகாரியள். கேட்டால் சொல்லினமாம் உங்களுக்கெல்லே உந்த மாதிரி ஒண்டும் கொண்டாடப்பிடாது எண்டு சொன்னனாங்கள். எங்கடை சொல்லை மீறிக் கொண்டாடின உங்களை நிப்பாட்டாமல் என்ன செய்யிறது எண்டும் கேட்டவையாம்.

அதுக்கு எம்பி ஸ்ரீதரன் என்ன சொல்லுறார் எண்டால் "உயிரிழந்த எங்கடை சொந்தத்துக்கு விளக்கு வைச்சுக் கண்ணீர் விடுகிற உரிமை கூட எங்களுக்கு இல்லாட்டி நல்லிணக்கம் எண்டதைப் பற்றிக் கதையாதையுங்கோ. அந்த அமைச்சை மூடிவிடுங்கோ" எண்டு. இல்லை தெரியாமல்தான் கேக்கிறன் நல்லிணக்கம், நல்லிணக்கம் எண்டு கதைச்சுக் கொண்டு இருக்கிறவைக்குத் தெரியாதோ மற்றைவையளின்ரை உணர்வை மதிக்கிறதாலைதான் உண்மையான நல்லிணக்கம் வரும் எண்டு. உப்பிடியான விசியத்தை உதாசீனம் பண்ணிப்போட்டு வேறை எதாலைதான் நல்லிணக்கம் வரப்போகுது? இப்ப ஸ்ரீதரன் நிக்கிறார் அந்த வங்கியை வடக்கிலையும், கிழக்கிலையும் தடை செய்ய வேணும் எண்டு. உப்பிடி எங்கடை தமிழற்றை உணர்வை மதிக்காத வங்கி என்னத்துக்கு? அப்ப அது ஒரு சிங்கள வங்கியாக்கும் எண்டும் ஸ்ரீதரன் சொன்னவர். இப்ப நான் கேள்விப்பட்டன் உண்மையோ, பொய்யோ தெரியாது. இப்ப தமிழ் ஆக்கள் அந்த வங்கியிலை இருக்கிற தங்கடை, தங்கடை வங்கிக் கணக்கை மூடுகினமாம். என்னைப் பொறுத்தவரை உது நல்லதொரு விசியம். தமிழ் உணர்வை மதிக்காத அவைக்குப் பிறகேன் தமிழற்றை காசும் அவையின்ரை வியாபாரமும்? அவை சிங்கள உணர்வை மட்டும் மதிச்சு அவையின்ரை காசை மட்டும் வேண்டி வங்கியை நடத்தட்டே!

இப்ப அந்த வங்கியின்ரை உரிமையாளர் என்ன செய்திருக்கிறார் எண்டால் தங்கடை வங்கிக்குப் பின்னாலை இனத்துவேச அரசியல் ஒண்டு இருக்குது எண்டு காட்டிப்போட்டார். அப்ப தங்களுக்கு தமிழ் ஆக்களின்ரை விசியத்திலை அக்கறை இல்லை எண்டும், இனிமேலும் இப்பிடி ஏதேன் விளக்குக் கிளக்குக் கொழுத்திச் சேட்டை விட்டால் உங்களுக்கும் உதுதான் நடக்கும் எண்டு மற்ற ஊழியருக்கும் ஒரு எச்சரிக்கை விட்டிருக்கினம். தெரியாமல் கேக்கிறன் அந்த வங்கியிலை வேலை செய்யிற எங்கடை ஆக்களுக்கு ரோச நரம்பு கிடையாதோ? இப்ப முஸ்லிம் ஆக்களிலை சேட்டை விட்டிருந்தால் அவங்கள் ஒற்றுமையா றோட்டிலை உடனை இறங்கி விடுவங்கள். அதுதான் அவங்கள் சிறுபான்மையா இருந்தாலும் அவங்களுக்குப் பெரிசுகள் பயம்.

உப்பிடிக் கன்னை பிரிச்சுப் பக்கம்சாந்து நிண்டு கொண்டு ஒரு இனத்தோடை சேட்டை விடக்குடாது. அதென்ன எங்கடை காசு மட்டும் அவைக்குத் தேவை. எங்களைத் தேவை இல்லை எண்டது. அவை தங்கடை கொல்லப்பட்ட உறவைத்தான் நினைச்சுக் கண்ணீர் விட்டவையே ஒழிய புலி பூனைக் கதை அவை கதைக் கேல்லை. அப்பிடிக் கதைச்சிருந்தாலும் அது பிழை எண்டு சொல்லேலாது. நீங்கள் எந்தப் பெயரையும் வையுங்கோவன். பயங்கரவாதியள் எண்ணுங்கோ. சந்திச் சண்டியன்கள் எண்ணுங்கோ. கொள்ளை அடிச்சவங்கள் எண்ணுங்கோ. அது உங்கடை நரம்பில்லாத நாக்காலை சொல்லுற கதை. எங்களைப் பொறுத்தவரை அவங்கள் எங்கடை இன உரிமைக்காகப் போரடின ஒரு இயக்கம். அப்ப அப்பிடிப்பட்ட தியாகியளுக்கு நாங்கள் விளக்குக் கொளுத்தாமல் என்ன ஆபிரிக்காவிலை இருந்து ஆரேன் வரப்போகினமே? பார் அவையின்ரை சேட்டையளை. உவை விடுகிற சேட்டையள் ஒவ்வொண்டுக்கும் உவை அனுபவிப்பினம். உலகத்திலை ஏன் சுனாமி இருக்கு? சூறாவளி இருக்கு? வெள்ளப் பெருக்கு இருக்கு? கண்மூடி நடக்கிறதுக்குள்ளை என்னவும் நடக்கலாம்? கவனம்.

**- வில்லங்கம் விநாசி**

# தொடர்ச்சிகள்

## தாளம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது மாகாண அலுவலர்கள் சிலரின் நடவடிக்கைகளை நான் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றேன். மத்தி என்ன நினைக்குமோ, மத்தியை ஆத்திரமூட்டினால் கிடைப்பதும் கிடைக்காமல் போய்விடுமோ, மத்திக்கு ஏற்றவாறு நாங்கள் நடந்து கொள்ள வேண்டும், அவ்வாறு நடந்தால் தான் சலுகைகளைப் பெறலாம் என்ற மனோநிலையில் அவர்கள் நடந்து வருகின்றார்கள்.

உதாரணத்துக்கு ஒரு உணவகம் அண்மையில் திறக்கப்பட்டது. அதற்கு தெற்கத்தைய உணவகங்களின் சிங்களப் பெயரைச் சூட்ட வேண்டும் என்று மத்தி எதிர்பார்த்தது. ஹெலபொஜுன் என்ற பெயரைச் சூட்ட வேண்டும் என்று கூறப்பட்டது. நான் அதற்கு சம்மதிக்கவில்லை. வேண்டுமெனில் ஹெல பொஜுன் என்ற சொல்லின் தமிழாக்கத்தைப் பாவிக்கலாம் என்றேன். அதாவது ஹெல -ஈழம், பொஜுன் - உணவகம் என்றவாறு ஈழ உணவகம் என்று பெயர் வைக்கலாம் என்று மத்திய அமைச்சருக்குக் கூறினேன். அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. அவ்வாறாயின் எமது வடமாகாண அதிகாரத்தின் கீழ்வரும் உணவகங்கள் போன்று அம்மாச்சி என்று பெயர் சூட்டுவோம் என்றேன். அவர் எதுவும் கூறவில்லை. உணவகத்தைத் திறக்கவும் வரவில்லை.

உணவகம் திறக்கப்பட்டு விட்டாலும் எமது அலுவலர்கள் இதுவரையில் அதற்குப் பெயரிடவில்லை. அவ்வளவு பயம் மத்திக்கு. மத்திய அரசாங்கத்தினர் என்ன கூறுவார்களோ என்று தம்மைத்தாமே ஒடுக்கிக்கொள்ளும் நிலைமையையே நான் இங்கு காண்கின்றேன். மக்களின் ஆதரவைப் பெற்ற மக்கள் பிரதிநிதிகள் இங்கு அதிகாரம் செலுத்துகின்றார்கள் என்பதை இங்குள்ள அதிகாரிகள் பலர் ஏற்றுக்கொள்வதாக இல்லை. மத்தியின் அதிகாரம் எப்பொழுது திரும்பவும் வரும் மத்திக்கு காக்காய் பிடித்து எமது தனிப்பட்ட நலன்களை எவ்வாறு நிறைவேற்றலாம் என்றே அவர்கள் சிந்திக்கின்றார்கள் போல் தெரிகிறது.

அண்மையில் கொழும்பு சென்று ஒரு அலுவலர் முல்லைத்தீவில் கடற்படையினர் காணிகளை விட்டு வெளியேற்றப்பட வேண்டும் என்று மக்கள் கோரவில்லை அரசியல் வாதிகளே கோருகின்றார்கள் என்று அரசாங்கத்துக்கு ஐஸ் வைத்திருக்கின்றார். மக்கள் அல்லும் பகலும் அவர்களை வெளியேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது அவருக்குத் தெரியவில்லை.

ஆகவே நான் கூறவருவது என்னவென்றால் தேவைகள் மதிப்பிடும் போது எமக்கிடையேயான பரஸ்பரம் கருத்துப்பரிமாற்றம் போதியவாறு நடைபெற வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றேன்.

இத்தேவைகள் மதிப்பீடு எமது முழுமையான பங்குபற்றலுடன் நடைபெற்றுள்ளது என்று எமது மக்கள் ஏற்றுக்கொள்வதாய் அமைய வேண்டும். இதுவரைகாலமும் மத்தியின் தலையீடு வெகுவாக இருந்து வந்துள்ளது. மத்தி தனது நலனையே முன்னிறுத்த நடவடிக்கைகளை எடுத்து வந்தது. உதாரணத்திற்குப் போரினால் பாதிக்கப்பட்ட விதவைகள் பற்றிய தரவுகளில் 29ஆயிரம் பேரில் போரில் மாண்ட கணவர்மார்களை இயற்கை மரணம் எய்தினார்கள் என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் புதைத்தார்கள். இவ்வாறு மத்திக்கு மத்தளம் அடிக்காது எம்முடன் வெகுவாகக் கலந்துரையாடும் நடைமுறையை மேற்கொள்ள வேண்டுமெனவும் முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

## நினைவேந்தலுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி யுத்தத்தில் தம் உயிர்களை அர்ப்பணித்த உறவினர்களை நினைவு கூருவது, அவர்களின் உரிமை என உதவி முகாமையாளர் தலைமை அலுவலக உயர் அதிகாரிகளுக்கு எடுத்துரைத்துள்ளார்.

ஆனால் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் போராளிகளை நினைவு கூர்ந்து வங்கியில் நினைவுச் சுடர் ஏற்றியமை தேசத்திற்கு விரோதமானது என்று குறித்த வங்கியின் கொழும்புத்தலைமை வாதிட்டிருக்கிறது.

அதுமட்டுமன்றி, உடனடியாக அந்த நிகழ்வை ஏற்பாடு செய்த உதவி முகாமையாளர், மற்றும் ஊழியர் ஒருவரையும் பணியில் இருந்து இடை நிறுத்துவதாகவும் அறிவித்திருந்தது.

இவ்விவகாரம் தமிழ் மக்களிடையே கடும் எதிர்ப்பலைகளை தோற்றுவித்துள்ளது.

இல்ங்கை அரசே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் தலையிடாத போக்கை கடைப்பிடித்துள்ள நிலையில் தனியார் வங்கி அதுவும் மக்களது பணத்தில் செயற்படும் வங்கி நிர்வாகத்தின் நடவடிக்கைகள் கடும் சீற்றத்தை தோற்றுவித்துள்ளது.

நேற்று காலை முதல் தமது எதிர்ப்பை வெளிப்படுத்து முகமாக நூற்றுக்கணக்கான தமிழ் வாடிக்கையாளர்கள் தமது கணக்குகளை மூடியுள்ளதுடன் அவர்களால் வழங்கப்பட்ட பெரிய யானை உண்டியல் மற்றும் புத்தகம், கொப்பிகளையும் திருப்பி கையளித்துள்ளனர்.

அத்துடன் தலைமையலுவலகத்துக்கு தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக எதிர்ப்பையும் வெளிப்படுத்திவருகின்றனர். அத்துடன் எதிர்வரும் நாட்களில் மேலும் பலர் தமது வங்கி கணக்குகளை மூடவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் வங்கி நிர்வாகம் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. தமிழ் மக்களிடையே கூடிய வாடிக்கையாளரை கொண்டுள்ள குறித்த வங்கியின் நிர்வாகத்தின் இனவாத செயற்பாடு தமிழ் மக்களிடையே சீற்றத்தை தோற்றுவித்துள்ளது.

## கூட்டமைப்புக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் பதவியானது முக்கியமான பதவியாக காணப்படுவதுடன், சபாநாயகர் நடுநிலையாகச் செயற்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் இம்முறைமை காணப்படவில்லை என்பதுடன், தற்போதைய சபாநாயகர் கரு ஜயசூரிய பிரதமருக்கு ஆதரவாகவே தொடர்ந்தும் செயற்படுகின்றார்.

நாடாளுமன்றத்தில் பெயரளவு எதிர்க்கட்சியாக செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு பிரதி சபாநாயகர் பதவியைக் கோருவதுக்கு எவ்வித உரிமைகளும் கிடையாது என்பதுடன், எதிர்க்கட்சிப் பதவியின் கடமைகளை மறந்தே இவர்கள் அரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்துகின்றனர்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு எதிர்த் தரப்பிலிருந்தே ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பணியாளரை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் எஸ்.சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நிதி அமைச்சு மீதான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பது தொடர்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் காரணமாக உயிரிழந்த தமது தமிழ் உறவுகளுக்காக கடந்த 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் வடக்கு முதல்வரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து தீப்பந்தங்களை ஏற்றி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்நிலையில், உயிரிழந்த தமது உறவினர்களுக்காகவும், பொதுமக்களுக்காகவும் குறித்த ஊழியர்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இந்த காரணத்தினாலேயே இவர்கள் இருவரும் தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர், மேற்படி தனியார் வங்கி சிங்கள வங்கியா? தமிழர்களை ஏற்க மறுத்தால் வடக்கில் அப்படியொரு வங்கியே தேவையில்லை.

உயிரிழந்த உறவினர்களுக்கு கண்ணீர் விடுகின்ற உரிமை இல்லையெனில் ஜனாதிபதி மற்றும் அமைச்சர் மனோ கணேசன் வசமிருக்கும் நல்லிணக்க அமைச்சுக்களை மூடிவிடுங்கள் என தெரிவித்துள்ளார்.

## ஹோட்டல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'யாழ்ப்பாண மாநகர மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் பெரியளவிலான வர்த்தகக் கட்டடங்களை அமைப்பதுக்கு எதிரான தமிழ், முஸ்லிம் மக்கள் அமைப்பு' ஒன்று உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பின் ஏற்பாட்டில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் வர்த்தக நோக்கிலான கட்டடங்கள் வேண்டாம் என்று வலியுறுத்தி அமைதிப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், ஜின்னா வீதியின், கலீமா ஒழுங்கை சந்திக்கு அருகாமையில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இந்தப் பேரணி இடம்பெற்றது.

இதேவேளை, அந்த இடத்தில் ஹோட்டல் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் மக்களின் எதிர்ப்பால் ஹோட்டல் அமைக்கும் பணிகளை யாழ்ப்பாண மாநகர சபை இடைநிறுத்தியது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்குமாறு யாழ்ப்பாண மாநகர சபை முதல்வரின் அலுவலகத்தால் மாநகர சபை உறுப்பினர்களுக்கு அழைப்புவிடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கொள்கையை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதுதொடர்பில் தென்னிலங்கையில் ஏற்பட்ட கொந்தளிப்பையடுத்து அந்த வங்கிக் கிளையின் உதவி முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர் ஒருவரும் முகாமைத்துவத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர்.

இது தொடர்பில் நேற்று குறித்த தனியார் வங்கியின் முகாமைத்துவம் தெரிவித்ததாவது,

'தெற்கில் போர் வெற்றி விழா தொடர்பான நடவடிக்கைகளில் எமது வங்கி பங்கு கொள்வதில்லை. எமது வங்கி சமூக ஊடகக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. எந்தவொரு நிகழ்வு தொடர்பிலும் முகாமைத்துவத்தின் அனுமதியைப் பெறவேண்டும்.

அது சாதாரண நிகழ்வாக இருந்தாலும் சரி, அஞ்சலி நிகழ்வாகவிருந்தாலும் சரி முகாமைத்துவத்தின் அனுமதி பெறப்படுவது கட்டாயமானது. வங்கிச் சீருடையுடன் வங்கி தொடர்பற்ற நடவடிக்கைகளில் பங்கேற்கக் கூடாது என்ற அறிவுறுத்தல் உண்டு.

தற்போது கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வும் அதனைக் காரணம் காட்டியே நடவடிக்கை எடுக்க முகாமைத்துவம் வற்புறுத்தப்பட்டது. எமது உத்தியோகத்தர்கள் இருவரும் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்படவில்லை. அனுமதி பெறப்படாத நிகழ்வு ஒன்றை நடத்தியமை வங்கியின் சமூக ஊடகக் கொள்கையை மீறிய செயல் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்கள் இருவர் மீதும் விசாரணை நடத்தப்பட்டது.

அந்த விசாரணையை நடத்திய வங்கியின் மனித வள அதிகாரி தமிழர். எனவே இன ரீதியான எந்தவொரு பழிவாங்கலும் இந்த விடயத்தில் பின்பற்றப்படவில்லை.

இது சம்பளத்துடன் கூடிய இடைநிறுத்தம். வங்கிகளில் உள்ளக விசாரணைகள் இந்த வழி முறையுடன்தான் ஆரம்பிக்கவேண்டும். சமூக ஊடகக் கொள்கைகளை மீறியது தான் குற்றச்சாட்டு. விசாரணைகள் நிறைவடைந்ததும் உரிய முடிவு வெளிப்படுத்தப்படும்' என குறித்த வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கதிர்காமத்தில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இல்லையென கோத்தாபய தெரிவித்திருந்த நிலையிலேயே அவர் கதிர்காமத்தில் மிகப்பெரிய ஆடம்பர பங்களாவை கட்டியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த ஆடம்பர மாளிகை வனராஜா பிரதேசத்தில் டிப்போ வீதி கதிர்காமத்தில் உள்ளது. அதனை இராணுவ சிப்பாய்கள் கூலியாட்களாக நின்று நிர்மாணித்துள்ளனர்.

மாணிக்ககங்கைக்கு அருகில் கட்டடக்கலையை எடுத்தியம்பும் வகையில் இந்த பங்களா கட்டப்பட்டுள்ளது.

ராஜபக்ச சகோதரர்கள் தமது முன்னைய ஆட்சியின் போது நாட்டின் பல பகுதிகளிலும் பங்களாக்களை கட்டியுள்ளனர். இதன்படி கோத்தாவின் சகோதரர் பசில் ராஜபக்சவும் தனது சொந்தப் பெரில் இல்லாமல் பங்களாக்களை கட்டியுள்ளார்.

கோத்தபாய முன்னர் ஒரு தடவை தனது பெயரில் இலங்கையில் சொத்து இருப்பதை எவராவது உறுதிப்படுத்த முடியுமா என சவால் விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த பங்களாவின் மின்சார பட்டியல் கோத்தாபய ராஜபக்சவின் பெயரிலேயே வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## என்ர காசை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சபை செய்வதன் அடிப்படையில் அந்த ஏற்பாடும் இடம்பெற்றது.

இருப்பினும் குறித்த நினைவை வடக்கு மாகாண சபை செய்யவில்லை என்பதன் அடிப்படையில் தன்னால் சம்மதம் தெரிவிக்கப்பட்ட 7 ஆயிரம் ரூபா பணத்தினையும் தனக்கு மாகாண சபை மீள வழங்க வேண்டும் என சி. தவராசா சபையின் அவைத் தலைவருக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவு 2016ஆம் ஆண்டு முதல் வடக்கு மாகாண சபை முன்னெடுத்துவரும் நிலையில் இந்த ஆண்டு பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டதில் பல சர்ச்சைகள் வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது.

## வெள்ளை வான்... (முத்லாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பாதுகாப்பு சபையில் உறங்கிக் கொண்டிருந்ததை மாத்திரமே மஹிந்த செய்தார். நாமே யுத்த களத்தில் இறங்கி பணியாற்றினோம். மஹிந்த மாத்திரமல்ல, இந்த நாட்டின் அனைத்து ஜனாதிபதிகளும் யுத்தத்தை முன்னெடுப்பதற்கு இராணுவ தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளனர்".

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் கோத்தபாய போட்டியிடுவாராக இருந்தால் அவருக்குரிய கட்டுப்பணத்தை செலுத்த தயாரெனவும் பொன்சேகா குறிப்பிட்டார்.

## மாணவியிடம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி - கரைச்சி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவியொருவரை அந்தப் பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபட்டு வரும் ஆசிரியர் ஒருவர் நேற்றுமுன்தினம் பாடசாலை நேரத்தில் தகாத முறையில் நடத்த முற்பட்டார் என்று தெரி

## அதிகரித்த பொலித்தீன் பாவனை இலங்கையில் பாரிய நெருக்கடி

கொழும்பு, மே 26

ஒழுங்கற்ற பொலித்தீன் உற்பத்தி மற்றும் அதன் அதிகரித்த பாவனை காரணமாக இலங்கையில் மிகப் பெரிய நெருக்கடி நிலை உருவாகி வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

பொலித்தீன் உற்பத்திகள் உரிய தராதரங்களுக்கு அமைய பயன்படுத்தப்படுவதில்லை. இதன் காரணமாக பெரும் சுற்றாடல் நெருக்கடிகள் தோன்றியுள்ளன. 2006ம் ஆண்டு ஒக்டோபர் 10ம் திகதி 20 மைக்ரோனை விட தடிப்புக் குறைந்த பொலித்தீனை உற்பத்தி செய்வதையும், விற்பனை செய்வதையும், பயன்படுத்துவதையும் தடைசெய்து அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனால், அன்றைய காலத்துடன் ஒப்பிடுகையில் இன்று முறையற்ற பொலித்தீன் பாவனை இடம்பெறுகிறது என மேற்படி விவசாய ஆராய்ச்சி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறவிருந்த மொழிபெயர்ப்பு கற்கைகள் பாடநெறிக்கான தெரிவுப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவே பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த பரீட்சை இடம்பெறும் திகதி தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (த)

# கிம்முடனான சந்திப்பை இரத்துச் செய்தார் ட்ரம்ப்!

வொஷிங்டன், மே 26

சிங்கப்பூரில் நடைபெறுவதாக இருந்த வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னுடனான சந்திப்பை, இரத்துச் செய்யவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் - அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆகிய இருவரும் அடுத்த மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் சந்திப்பதற்குத் திட்டமிட்டப்பட்டிருந்தது. இதற்காக அமெரிக்கா தரப்பில் இருந்து நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அணு ஆயுதச் சோதனைக் கூடங்களை தகர்க்க வேண்டும்,



கைவசம் உள்ள அணு ஆயுதங்களை அழிக்க வேண்டும் போன்ற பல நிபந்தனைகள் முன் வைக்கப்பட்டன.

அணு ஆயுதச் சோதனைக் கூடங்களை அழிப்பதற்கு ஒத்துக்கொண்ட வடகொரியா, சில நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தது. இதற்கிடையே, தென்கொரியாவுடன் சமீபத்தில் நடக்க இருந்த சந்திப்பை வடகொரியா இரத்துச் செய்தது. ட்ரம்ப் உடனான சந்திப்பு முடிவில் இருந்து விலகுவோம் எனவும் எச்சரிக்கையும் விடுத்திருந்தது.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ட்ரம்ப் நேற்றுமுன்தினம் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "கிம் உடனான பேச்சுவார்த்தை சிறப்பான ஒன்றாக இருக்கும். இப்போது அது நடக்கவில்லை என்றாலும் சில காலத்துக்குப் பின்னர் நடக்கலாம். சிங்கப்பூர் சந்திப்பு வேலைக்கு ஆகாது என்பதற்கான காரணங்கள் நிறைய உள்ளன." என அவர் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, கிம் ஜோங் உன்னுக்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடிதம் எழுதியுள்ளளார். அதில், அவர்கள் இருவருக்கும் இடை யே சிங்கப்பூரில் நடைபெற இருந்த பேச்சுவார்த்தை இரத்துச் செய்யப்படுவதாக அதிகாரப்பூர்வமாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

# அமெரிக்காவுடன் பேச எப்போதுமே தயார்!

## வடகொரியா திடீர் பல்டி

பியாங்யாங், மே 26

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னுடனான சந்திப்பை, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இரத்துச் செய்துள்ள நிலையில், எப்போது வேண்டுமானாலும் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயார் என வடகொரியா அரசு அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மறுப்புத் தெரிவித்த நிலையில் வெள்ளை மாளிகையில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய ட்ரம்ப், கிம் ஜோங் உன்னுடன் சிங்கப்பூரில் நடைபெற இருந்த பேச்சுவார்த்தையை இரத்துச் செய்வதாக உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

அமெரிக்காவின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மறுப்புத் தெரிவித்த வடகொரியா, ட்ரம்பின் உத்தியோகபூர்வ அறிவிப்பை அடுத்து,



அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என திடீர் மனமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, வடகொரிய வெளியுறவுத் துறை அமைச்சர் கிம் கை குவான் கூறுகையில்,

"வடகொரிய ஜனாதிபதியுடனான சந்திப்பை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இரத்துச் செய்து அறிவிப்பு வெளியிட்டுள்ளமை மிகவும் வருத்தம் அளிக்கிறது. எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைகளைத் தீர்க்க நாங்கள் தயார்." என அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# அணு ஆயுதக் கூடத்தை தகர்த்தது வடகொரியா!

பியாங்யாங், மே 26

வடகொரியாவின் மண்ட்டாப் மலைப்பகுதியில் உள்ள புங்யே-ரி என்னும் இடத்தில் அமைந்துள்ள அணு ஆயுதப் பரிசோதனைக் கூடம் தகர்க்கப்பட்டதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

புங்யே-ரி பகுதியில் வடகொரியாவின் அணு குண்டுப் பரிசோதனை நடத்தும் மையத்தையும், இதற்காக மலைகளை குடைந்து வெட்டப்பட்டுள்ள இரகசிய சுரங்கங்களையும் நிர்மூலமாக்கி மூடிவிட வடகொரியா அரசு முடிவெடுத்துள்ளதாக ஊடகங்கள் சமீபத்தில் செய்தி வெளியிட்டன.

மேலும், அந்தப் பகுதியில் உள்ள அணு ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு மையங்கள், சோதனை மற்றும் பாதுகாப்புச் சாவடிகளும் அகற்றப்படும் என தெரியவந்துள்ளது. அதனை பார்வையிட்டு உறுதி



செய்ய வெளிநாட்டு ஊடகங்களுக்கு வடகொரியா அழைப்பு விடுத்தது. இதையடுத்து, ரொய்ட்டர்ஸ், சி.என்.என், சி.பி.எஸ், ரஷ்யா டுடே மற்றும் சீன ஊடகங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் வட கொரியாவுக்குச் சென்றனர்.

இந்த நிலையில், புங்யே-ரி அணு ஆயுதப் பரிசோதனைக் கூடம் வெடி வைத்து தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஆ)

# எம். எச் 17 மலேசிய ஏர்லைன்ஸை தாக்கியது ரஷ்ய ஏவுகணையே !

## விசாரணைக்குழு உறுதி



மொஸ்கோ, மே 26

2014 ஆம் ஆண்டு கிழக்கு உக்ரைன் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட, எம். எச் 17 மலேசியப் பயணிகள்விமானத்தை ரஷ்ய ஏவுகணையே தாக்கியது என்று, அந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வரும் குழு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த விசாரணைக் குழுத் தலைவர் வில்பர்ட் பாலிஸ்ஸன், "மலேசியாவின் எம்.எச்17 விமானத்தை ரஷ்யாவின் 'பியூகே-டெலார்' வகையைச் சேர்ந்த ஏவுகணைதான் சுட்டு வீழ்த்தி உள்ளது.

தரையிலிருந்து வான் இலக்குகளைத் தாக்கி அழிக்கவல்ல அந்த ஏவுகணை, ரஷ்யாவின் கர்ஸ்க் நகரில் நிலைகொண்டுள்ள அந்த நாட்டு இராணுவத்தின் விமான எதிர்ப்புப் படையின் 53 ஆவது பிரிவிடம் இருந்ததாக விசாரணையில் தெரிய வந்துள்ளது ." என்று அவர் தெரிவித்தார்.

ரஷ்ய இராணுவப் பிரிவிடம் இருந்த ஏவுகணையால்தான் மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக சர்வதேச விசாரணை அதிகாரிகள் தெரிவிக்கின்றமை இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட பி.யூ.கே ஏவுகணையை உக்ரைன் கிளர்ச்சியாளர்கள் வாங்கித் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இருந்து விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாக விசாரணைக் குழு கூறி வந்தது.எனினும், தற்போது மிகக் கடினமான ஆய்வுகளுக்குப் பிறகு, காணொளிகள் மற்றும் படங்களை ஆதாரமாகக் கொண்டு அந்த ஏவுகணை ரஷ்யாவின் கர்ஸ்க் நகரிலிருந்து வந்ததாக அந்தக் குழு கூறுகிறது.

மலேசியாவில் இருந்து நெதர்லாந்துக்கு கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம்17 ஆம்திகதி சென்று கொண்டிருந்த மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம், ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு உக்ரைன் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில், அந்த விமானத்தில் பயணித்த 283 பேரும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ஜீ.விக்கு ஜோடியாகும் 'எங்க வீட்டு மாப்பிள்ளை' அபர்ணதி!





சென்னை, மே 26

இயக்குநர் வசந்தபாலன் இயக்கும் புதிய படத்தில், ஜீ.வி.பிரகாஸூக்கு ஜோடியாக 'எங்க வீட்டு மாப்பிள்ளை' அபர்ணதி நடிக்க உள்ளார்.

'ஆல்பம்', 'அங்காடித்தெரு', 'வெயில்', 'அரவான்', 'காவியத்தலைவன்' போன்ற படங்களை இயக்கிய வசந்தபாலன் தற்போது ஜீ.வி.பிரகாஷ் நாயகனாக நடிக்கும் இந்தப் படத்தை இயக்குகிறார். படத்துக்கு இன்னும் தலைப்பு வைக்கப்படவில்லை.

இந்தப் படத்தில் ஜீ.வி.பிரகாஸூடன் 'பள்ளிப்பருவத்திலே' நாயகன் நந்தன் ராம், 'பசங்க' பாண்டி ஆகியோர் நடிக்கின்றனர். ஆர்யாவுடன் 'எங்க வீட்டு மாப்பிள்ளை' நிகழ்ச்சி மூலம் பட்டிதொட்டியெங்கும் பிரபலமான அபர்ணதி கதாநாயகியாக நடிக்கிறார். முக்கியக் கதாபாத்திரத்தில் ராதிகா நடிக்கிறார். இவர்களுடன் ஜெனிஃபர், மணிமேகலை, ' மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

ஜீ.வி.பிரகாஷ் இசையமைக்கும் பெயரிடப்படாத இந்தப் படத்துக்கு கணேஷ் சந்திரா ஒளிப்பதிவு செய்கிறார். ஜி.ராமகிருஷ்ணனும், பாக்கியம் சங்கரும் வசனம் எழுதுகின்றனர்.

'4ஜி', 'ஐங்கரன்', 'அடங்காதே', 'குப்பத்துராஜா', '100% காதல்', 'சர்வம் தாளமயம்', 'ரெட்டைக்கொம்பு', 'கறுப்பர் நகரம்', ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கும் படம் என சுமார் 10 படங்கள் ஜீ.வி.பிரகாஷ் வசம் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# தமிழகத்தில் முழு அடைப்பு

சென்னை, மே 26

ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்தைக் கண்டித்து, தமிழகத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் சார்பில் நேற்று முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடந்த போராட்டத்தின் போது, பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், 13 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதற்கு அரசியல் தலைவர்கள் மற்றும் பல்வேறு அமைப்பைச் சேர்ந்தவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். மேலும், மாநிலம் முழுவதும் போராட்டங்களும் நடைபெற்றன.

இந்த நிலையில், நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்திய துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து தி.மு.க. மற்றும் தோழமை கட்சிகள் சார்பில் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றுள்ளது. (ஆ)

# திருமணமான 15 நிமிடத்தில் விவாகரத்து!

அபுதாபி, மே 26

டுபாயில் திருமணமாகி 15 நிமிடங்களில் விவாகரத்தான விநோதமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

டுபாயில் மணமகன் ஒருவர் 20 ஆயிரம் பவுண்ட்ஸ் கொடுத்து உங்களது மகளைத் திருமணம் செய்து கொள்கிறேன் என மணமகளின் தந்தையிடம் கூறியுள்ளார். இதற்கு மணமகளின் தந்தை சம்மதம் தெரிவித்துள்ளார். இதையடுத்து, அனைவருடைய முன்னிலையிலும் இவர்களது திருமணம் நடைபெற்றது.

திருமணம் முடிந்தவுடனேயே பணத்தைத் தருமாறு மணமகளின் தந்தை கேட்டுள்ளார். அப்போது மணமகன் பேசிய தொகையைக் கொடுக்காமல் பாதி தொகையான 10 ஆயிரம்பவுண்ட்ஸ்மட்டுமே கொடுத்துள்ளார். இதனால், கோபம் கொண்ட மணப்பெண்ணின் தந்தை அனைவர் முன்னிலையிலும் சண்டையிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தால் தனக்கு அவமானம் நேர்ந்து விட்டதாகக் கூறி, மணமகன் திருமணமான 15 நிமிடத்திலேயே 'தலாக்' சொல்லி மணமகளை விவாகரத்துச் செய்துள்ளார். (ஆ)



# நன்றி

கேப்டவுண், மே.26

சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக தெரிவித்ததற்கு ஆதரவும், அன்பும் தெரிவித்த ஒவ்வொருவருக்கும் ஏபி டி வில்லியர்ஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் "ஒவ்வொருவருக்கும் நன்றி, குறிப்பாக முன்னாள் இன்னாள் வீரர்களுக்கும், எனது அணியின் சக வீரர்களுக்கும், எதிரணி வீரர்களுக்கும். அவர்களுடைய சிறந்த வாழ்த்துக்கும், என்னைப் பற்றி புரிந்து கொண்டதற்கும்.

கடந்த இரண்டு மூன்று நாட்கள் கடினமானதாகவும், உணர்ச்சி மிகுந்ததாகவும் இருந்தது. ஆனால், என்மீது வைத்திருந்த அளவு கடந்த அன்பாலும், ஆதரவாலும் அதில் இருந்து திரும்பினேன்" என்று பதிவிட்டுள்ளார்.



# இறுதிக்கு முன்னேறியது ஹைதராபாத் சன்ரைசர்ஸ்

கொல்கத்தா, மே 26

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என எல்லாவற்றிலும் ரஷீத்கான் விஸ்வரூபமெடுக்க, இறுதிப்போட்டிக்குச் செல்லும் வாய்ப்பை ஹைதராபாத் சன்ரைசர்ஸிடம் தாரை வார்த்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி.

இறுதிபோட்டிக்குச் சென்று சென்னையைச் சந்திக்கும் அணி எது என்பதைத் தெரிவு செய்வதற்காக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

ஹைதராபாத் அணிக்கு சஹாவும், தவானும் சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தனர். ஆனால் அதன் பின்னர் அந்த அணியும் தாக்குதல் ஆட்டம் , தற்காப்பு ஆட்டமாக மாற ஓட்டவேகம் சடுதியாகச் சரிந்தது. எனினும் கடைசி நேரத்தில் ரஷீத்கான் 10 பந்துகளில் 4 சிக்ஸர்கள் அடங்கலாக 34 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவிக்க, ஹைதராபாத் அணி 174 என்ற ஓட்ட எண்ணிக்கையைத் தொட்டது. தவான் 34, சஹா 35, வில்லியம்சன் 3, ஷகிப் அல் ஹசன் 28, கூடா 19, யூசுப் பதான் 3, ப்ராட் வைட் 3, புவனேஸ்வர் குமார் 5 ஓட்டங்களை எடுத்தனர். குல் தீப் யாதவ் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு கொல்கத்தாவும் அபாரமான ஆரம்பத்துடுப்பாட்டத்தை வழங்கியது. ஆனால் மத்தியவரிசை வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டத்தால், ஓட்டவேகம் குறைந்ததோடு, விக்கெட்டுகளும் மளமளவெனச் சரிந்தன. குறிப்பாக ரஷீத்கானின் சுழலில் நிலைகுலைந்த கொல்கத்தா வீரர்கள் அடித்தாடவும் முடியாமல், நிலைத்தாடவும் முடியாமல் தலையைக் குனிந்தபடி வெளியேறினர். இதனால் கடைசிக் கட்டத்தில் சுப்மன் கில் போராடியும் வெற்றிஎ அடைய முடியாமல், 20 ஓவர்கள் நிறைவில் கொல்கத்தா அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களையே எடுத்தது. இதனால் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தாவை வீழ்த்து, இறுதிப்போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸோடு மோத முன்னேறியது ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணி. ரஷீத்கான் ஆட்டநாயகனானார். (அ)

# அதிர்ச்சி தோல்வி



பேர்லின், மே 26

ஜேர்மனியில் நடைபெற்று வரும் நியூரம்பெர்க் கிண்ண டென்னிஸ் தொடரின் காலிறுதியில் செக்குடியரசின் கரோலினா பிலிஸ்கோவா தோல்வியடைந்துள்ளார்.

நேற்று நடைபெற்ற காலிறுதிப்போட்டியில் சுவீடன் வீராங்கனை ஜொஹன்னா லெர்சொனை, பிலிஸ்கோவா எதிர்காண்டு விளையாடினார்.

இந்தப் போட்டியில் ஆரம்பம் முதல் கடுமையாகப் போராடிய பிலிஸ்கோவா 1-2 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தார்.

போட்டியின் ஆரம்ப செட்டை பிலிஸ்கோவா 7-5 என கைப்பற்றி, முன்னிலை வகித்த போதிலும், அடுத்த இரண்டு செட்களிலும் சிறப்பாக ஆடிய லெர்சொன் 7-5 மற்றும் 6-4 என வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

லெர்சொன் அரையிறுதிப்போட்டியில் செக்குடியரசு வீராங்கனை கெதரினா சினியாகோவாவை எதிர்கொள்ளவுள்ளார்.

# கனடாவில் விளையாடவுள்ள மலிங்க



றொறன்ரோ, மே 26

உலகளாவிய ரீதியில் நடைபெற்று வரும் கிரிக்கெட் லீக் போட்டிகளை போன்ற ரி-20 தொடரொன்றை கனடா ஏற்பாடு செய்துள்ளது.

உலகத் தரம் வாய்ந்த கிரிக்கெட் தொடர் என்பதால், உலகின் முன்னணி கிரிக்கெட் வீரர்களை கனடா அணுகியுள்ளது.

இதன்படி வீரர்களின் பேச்சுவார்த்தையை நடத்திய பின்னர், தங்களின் வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ள முதன்மை வீரர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள இந்த வீரர்கள் பட்டியலில், இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான லசித் மலிங்க உள்வாங்கப்பட்டுள்ளார்.

இவருடன் உலகின் முன்னணி ரி-20 வீரர்களாக வலம் வரும், கிறிஸ் கெயில், சுனில் நரைன், டவைன் பிராவோ, டெரன் சமி, என்ரே ரஷல், டேவிட் மில்லர், சஹிட் அப்ரிடி மற்றும் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் தடை விதிக்கப்பட்ட அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித்தும் இணைக்கப்பட்டுள்ளார்.

குளோபல் ரி 20 தொடர் எதிர் வரும் ஜூன் 28ஆம் திகதி முதல் ஜூலை 15ஆம் திகதி வரை கனடாவில் நடைபெறவுள்ளது. (த)

# கோலி மெஷின் அல்ல

டெல்லி, மே 26

கழுத்துப் பகுதியில் காயம் ஏற்பட்டு ஓய்வு எடுக்கும் விராட் கோலி மெஷின் அல்ல என்று ரவி சாஸ்திரி விளக்கம் அளித்துள்ளார்.

இந்திய அணித்தலைவர் விராட் கோலி காயம் அடைந்துள்ளார் என்ற செய்தி நேற்று வெளியானது. முதுகுத் தண்டில் காயம் ஏற்பட்டது என்றும், கழுத்துப் பகுதியில் காயம் ஏற்பட்டது என்றும் கூறப்பட்டது. இறுதியில் முதுகுப் பகுதியில் காயம் ஏற்படவில்லை என்றும், கழுத்துப் பகுதியில்தான் காயம் ஏற்பட்டது என்றும் பிசிசிஐ உறுதிப்படுத்தியது.

காயத்தால் விராட் கோலி சர்ரே கவுன்டி அணியில் இருந்து விலகியுள்ளார்.

இந்நிலையில் இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக இருக்கும் ரவி சாஸ்திரி, விராட் கோலி மெஷின் அல்ல என்று விளக்கம் அளித்துள்ளார். "விராட் கோலி கவுன்டி ஆட்டத்தை கைவிட்டுள்ளார். ஏனென்றால், அவர் அந்த அணிக்குரிய முக்கியமான வீரர் அல்ல. அவர் மெஷின் கிடையாது. விராட் கோலி ஒரு மனிதன்.

ரொக்கெட் எரிபொருளை அவருக்கு பின்னால் கட்டி, அவரை மைதானத்துக்குள் இறக்கி விடுவது போன்றது கிடையாது. சிறந்த வீரராக இருந்தாலும் கூட அவருடைய முதுகில் ரொக்கெட் எரிபொருளை கட்டி விடமுடியாது" என்றார்.





# டோனிக்காக கிண்ணம்

மும்பை, மே 26

அணித்தலைவர் எம்எஸ் டோனிக்காக இந்த முறை கோப்பையை வெல்ல விரும்புகிறோம் என்று சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ரெய்னா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ரெய்னா கூறுகையில் "சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக எம்எஸ் டோனி அதிக அளவில் அக்கறை எடுத்து வருகிறார். நாங்கள் எல்லோரும் சிறப்பாக விளையாடி வருகிறோம். 2008-ல் இருந்து சென்னை அணிக்காக மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். அவர் மிகவும் சிறந்த நபராக வலம் வருகிறார். எனவே, இந்த முறை டோனிக்காக ஐபிஎல் கோப்பையை வெல்ல விரும்புகிறோம்" என்றார்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 26.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.